REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 21உ செவ்வாய் (5—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 22உ புதன் (6—7—55) [இதழ் 18

காமராசரின் 'பக்தி' முற்றுகிறது!

திருநெல்வேலி, ஜூலை 4—

நெல்லையப்பர்—காந்திமதி கோயிலில் 'ஆனித்தேர் உற்சவம்' நடைபெறுகிறது. அந்த தேரோட்டத்தில் முதன் மந்திரி காமராசர் பங்கு பெற்று தேர் இழுத்ததாகச் செய்தி வந்துள்ளது.

குற்றாலத்திலிருந்து, பாளையங்கோட்டை செல்லும் வழியில், கோயில் நிர்வாகிகள் வேண்டிக்கொண்டபடி காமராசர் நெல்லையில் இந்த விழாவில் பங்கு கொண்டாராம்,

கோயிலில் இவருக்கு 'பூரண கும்ப' மரியாதை செலுத்தப் பட்டதாம்.

64 நாட்களாக நடைபெறும் வீரப் போர்

46000 தொழிலாளர்களின் திட சித்தம்

1000 தொழிலாளர்கள் சிறையில்

காங்கிரஸ் சமதர்ம வடிவத்தின் அவலட்சணம் அம்பலம்

கான்பூர், ஜூலை 5—

நெசவாலைத் தொழிலாளர்கள் தொடங்கியுள்ள வேலை நிறுத்தம், நேற்றோடு 64 நாட்களாகி விட்டது.

இதுவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்றுள்ள வேலை நிறுத்தங்கள் அனைத்திலும், இதுவே முதல் முதலாக நடைபெறும் நீண்ட கால வேலை நிறுத்தமாகும். மொத்தத்தில் 46 000 தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

நவீன இயந்திரங்களைப் புகுத்துவதின் மூலம் தொழிலாளர்களை வெளியேற்றும் ஆலை அதிபர்களின் முயற்சியை எதிர்த்தே மேற்படி வேலை நிறுத்தம் துவங்கப்பட்டிருக்கிறது. களையப்பட வேண்டிய வேறு குறைபாடுகளும் தொழிலாளர்களுக்கு இருந்து வருகின்றன.

கடந்த மே மாதம் 2-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

குறைந்த அளவிலோ முழு நிலையிலோ, 10 பருத்தி நெசவாலைகளும், ஒரு கம்பளி நெசவாலையும்; வேலை நிறுத்தத்தால் பாதகமடைந்திருக்கின்றன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பஞ்சு நெசவாலைத் தொழிலாளர்களுக்கு அனுதாபங்காட்டும் வகையில், இரண்டு சணலாலையைச் சேர்ந்த 5000 தொழிலாளர்களும் மே மாதம் 2-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

அரசாங்க சார்பில், வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களில் 50 சதவிகிதத்தினர் வேலைக்குத் திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தம் துவக்கப்பட்ட நாளில் இருந்து ஏறத்தாழ ஆயிரம் தொழிற்சங்க உறுப்பினர்கள்வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் சுதி மில் மஸ்தூர் சபை பொதுக் குழு உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

ஆரம்ப முதல் இன்றுவரை அமைதியாகவே வேலை நிறுத்தம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பிரகாசத்திற்கு உபகாரச் சம்பளம்

சட்டப்படி இயலாதென அறிவிப்பு

தன் நிதியிலிருந்து தர காங்கிரஸ் சம்மதம்

ஆந்திர முன்னாள் முதன் மந்திரி டி. பிரகாசத்திற்கு உபகாரச் சம்பளம் தர சர்க்கார் எண்ணியிருந்ததற்கு, ஆந்திர அட்வகேட்-ஜெனரல் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறாராம்.

சட்டப்படி, இம்மாதிரி சலுகை தர இயலாதென அவர் கூறியிருக்கிறாராம்.

காங்கிரஸ் 'மேலிடம்', இதனை மேற்கொண்டு, தன் நிறுவன நிதியிலிருந்து மாதம் ரூ. 750 வரை அவரது வாழ்நாள் முழுதும் தர இசைந்திருக்கிறதாம்; ஆனால் பிரகாசம் இதை ஏற்பாரா இல்லையா என்பது எதிர்பார்க்கப்படுகிறதாம்!

'தொழிற் கட்சியை இங்கு உருவாக்க முடியாது'

தேசீய தொழிற் சங்கத் தலைவரின் விளக்கம்

இந்தூர், ஜூலை 4—

"இந்தியாவில் ஒரு தொழிற் கட்சியை உருவாக்குவதற்கான வாய்ப்போ வசதியோ கிடையாது; ஏனெனில், இங்குள்ள மொத்த மக்கள் தொகையில் தொழிலாளர்கள் எனப்படுவோர் மூன்று சத விகிதத்தினராகவே இருந்து வருகின்றனர்."

"இக்குறைந்த எண்ணிக்கை பலம் கொண்ட தொழிலாளர்கள், ஒரு நாட்டின் நடைமுறையைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற முடியாது,"

என்று, தேசீயத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர் அம்பேகர் கூறியுள்ளார்.

கான்பூர் வேலை நிறுத்தத்தைக் குறித்துக் கூறும்பொழுது, 'அப்பயனற்ற வேலை நிறுத்தத்தால் ஏற்படப்போகும் பலன் ஒன்றுமில்லை' என்று குறிப்பிட்டார்.

காங்கிரசின் கைக்கூலியாக தேசீய தொழிற் சங்கம் இயங்கவில்லை என்றும், இரண்டு கட்சியும் காந்தியாரிடமிருந்து உணர்வு பெற்று இயங்கி வருவதாகும் என்றும் அவர் மேலும் பேசும்பொழுது கூறினார்.

'இட்லி-சாம்பார் எங்களுக்கு வேண்டாமே!'

'ரொட்டி-வெண்ணெய்தான் எங்களுக்கு வேண்டும்'

பிணியாளர்களின் கருத்துக்கு எதிரான சென்னை அரசாங்கப் போக்கு

"சமீப காலம்வரையில் அரசாங்க மருத்துவ மனைகளில், பிணியாளர்களுக்கு ரொட்டி—வெண்ணெய் உணவாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பதிலாக இட்லி—சாம்பார் இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வுணவு மாறுதல் செய்யப்படுவதற்கு முன், இம்மாற்றம் குறித்து பிணியாளர்கள் கருத்து கோரப்பட்டது. பெரும்பான்மையான பிணியாளர்கள் வழக்கப்படி ரொட்டி-வெண்ணெய்தான் தங்களுக்குத் தேவையெனக் கூறினர்; அவர்கள் கோரிக்கை அலட்சியப்படுத்தப்பட்டு, அவர்கள்மீது இட்லி-சாம்பார் திணிக்கப்பட்டிருக்கிறது —அரசாங்கத்தால்."

இக்கருத்துடைய கடிதம் ஒன்று 'இந்து' இதழில் வெளிவந்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"மற்ற அரசாங்க மருத்துவமனைகளைவிட க்ஷயரோக மருத்துவ விடுதியின் நிலைமை மாறுபட்டு இருப்பதாகும். உண்மையான க்ஷயரோகிகள்தான் இம்மருத்

(4-ம் பக்கம் பார்க்க)

'ரம்சான் மாதத்தில் உண்ணாநோன்பு இருப்பது மதக் கட்டளை அல்ல'

பேராசிரியர் துணிவுக்கு சிந்தனையாளர் பாராட்டு

மதப் பேராசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை

கெய்ரோ, ஜூலை 4—

அல் அசார் பல்கலைக் கழகத்தில் மதப் பேராசிரியராக இருக்கும் ஷேக் அப்துல்லா அமீத் பகீத் என்பார், 'ரம்சான் புனித மாதத்தில் உண்ணா நோன்பு இருக்க வேண்டியது, மதக் கட்டளை அல்ல,' என வெளிப்படையாகக் கூறி இருந்தார்.

அப்பேராசிரியரின் அக்கருத்து, மதப் பற்றுடைய முஸ்லீம்களிடை பெரும் கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டது.

அதன் விளைவாக அவர், அல் அசார் பல்கலைக் கழகத்தின் செயற் குழுவின் முன்பாக விசாரிக்கப்பட்டு, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அப்பேராசிரியருடைய மேற்குறிப்பிட்டுள்ள கருத்தை ஆதரிக்க முன்வராத சிறப்புடைய முஸ்லிம் சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும், மத விஷயத்தில். அவர் கருத்து அறிவித்தத் துணிவிற்காக, அவரைப் பாராட்டுகின்றனர்.

எகிப்து உயர் நீதிமன்றத்தில், தன் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக, வழக்காடப்போவதாக, அப்பேராசிரியர் கூறியுள்ளார்.

"எனக்கு எதிராகக் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பு இஸ்லாமிற்கு ஒரு களங்கமாக என்றென்றும் இருக்கும்; ஒழுக்கக் கேட்டிலிருந்து அல்

(4-ம் பக்கம் பார்க்க)

'பொறுத்திருங்கள்!'

கோவா பற்றி காங்கிரசாருக்கு தேபர் வேண்டுகோள்

கோவா பற்றி காங்கிரஸ் மேலிடம் அதன் கொள்கையை அறிவிக்கும் வரை தன்னடக்கத்துடன் நடந்து கொள்ளுமாறு காங்கிரசாரை தலைவர் யூ. என். தேபர் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

கசப்பும் வெறுப்பும்

கோவாவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் 50,000 வெள்ளைக்கார துருப்புகள் மனக்கசப்பு அடைந்திருப்பதாகவும், போர்ச்சுகீசிய அதிகாரிகளின் போக்கில் வெறுப்புற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனோ இந்த நிலை?

கோவாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க எல்லோரும் ஒரு நாள் வருவாயைத் தந்து உதவும்படி போர்ச்சுகீசிய அதிகாரிகள் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனராம்.

தபால் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர்

திரு. இராசன்

சீன நாட்டிற்குச் சென்று தாயகம் திரும்பினார்

★



சென்னை, ஜூலை 4—

அகில இந்திய தபால் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. இராசன், சீனத் தலைநகரில் நடைபெற்ற மாபெரும் மே தின அணிவகுப்பிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு, சீன நாட்டில் ஒரு மாதம் தங்கி, அங்குள்ள தொழிலாளர்களின் நிலைகளை அறிந்துகொண்டு இன்று மாலை 5-15 மணிக்கு சென்னை வந்தடைந்தார். அவருக்கு சென்னை மத்திய புகைவண்டி நிலையத்தில், தபால்-தந்தி ஊழியர்களின் சார்பிலும், தொழிற் சங்கத் தலைவர்களின் சார்பிலும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பெங்களூரில், ஜூலை 9, 10, 11, 12, 13 தேதிகளில் நடைபெறவிருக்கும் அகில இந்திய தபால் ஊழியர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு, ஜூலை 15-ந் தேதி டில்லி செல்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—7—'55 செவ்வாய்

கோவா இணைப்பு

மேற்குக் கடற்கரையோரத்தில் ஒரு சிறிய நிலப் பரப்பாக கோவா இருந்து வருகிறது. அச்சிறு நிலப் பரப்பில் ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த நானூறு ஆண்டுகளாக, அச்சிறு நிலப் பரப்பு போர்ச்சுகீசியர் ஆட்சியில் இருந்து வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் நிலப் பரப்புடன் கோவா ஒப்பிடப் படுகிறபொழுது எவ்வளவு மிகச் சிறு நிலப் பரப்பாகக் காணப்படுகிறதோ, அதைவிட மிகமிகச் சிறு அளவு நிலப் பரப்புடையதாகவே, ஐரோப்பாவில் போர்ச்சுகல் இருந்து வருகிறது.

ஐரோப்பாவில் ஒரு சிறிய நிலப்பரப்பாக இருக்கிற போர்ச்சுகல், இந்தியத் துணைக் கண்டத்தில் கடுகளவேஇருந்து வரும் கோவாவை இவ்வளவு ஆண்டுகளாகத் தனது பிடியில் வைத்திருப்பதே வரலாற்றின் விசித்திரமாகும். அதைக்காட்டிலும் விசித்திரமும் வேதனையும் நிரம்பியதாக இருந்து வருவது, அத்தகு சிறு போர்ச்சுகலின் அரசியல் பிடியிலிருந்து விடுபட, அங்குள்ள மக்கள் சுட்டு விரலையும் அசைக்காது இருந்ததேயாகும். இப்பொழுதுங்கூட, போர்ச்சுகல் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள, கோவா மக்கள் போதுமான அளவில் முயற்சிக்கிறார்களோ என்பது ஐயத்திற்குரியதாகவே இருந்துவருகிறது.

மிகச் சிறிய தீவான இங்கிலாந்தும்தான், பரந்த இந்தியக் கண்டத்தை இரு நூற்றாண்டு காலமாகத் தனது பிடியில் வைத்து வந்திருக்கிறது. அதன் பலனாக, இங்கிலாந்து பெரும் தொழில் நாடாகவும் வளர்ந்து வந்திருக்கிறது. அதே நேரத்தில், தனது உள்நாட்டுத் தொழில் வளத்திற்குக் கேடு நேரக்கூடாத வகையில், கூடுமானவரை இந்தியத் துணைக் கண்டத்தைத் தொழில்மயமாகவும் மாற்றி அமைத்திருக்கிறது.

உலகத்தில், இங்கிலாந்திற்குக் குடியேற்ற நாடுகளே இல்லாத இடம் கிடையாது. அந்தக் காரணத்தினாலேயே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரிய மறைவே கிடையாது என்ற சொல் எழலாயிற்று.

உலகத்தில் உருவான புதிய மாற்றங்களாலும், அவைகளைத் தன்வயப்படுத்துவதற்கான ஆற்றல் தன்னை விட்டுக் கைமாறிவிட்டதாலும், இந்தியத் துணைக்கண்டத்து மக்களிடம் புதிய உரிமை வேட்கை தோன்றிவிட்டதாலும், தன்னைய தற்கொலை செய்து கொண்டு, காலத்திற்கேற்ப புதுக் கோலம் பூண, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முன்வந்துவிட்டது. அந்த நல்லறிவின் உரு பலன்தான், இந்தியத் துணைக் கண்டம் ஒரு சுதந்திர அரசாக இன்று திகழ்வது.

ஏறத்தாழ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சமமான ஒரு ஏகாதிபத்தியமாகத்தான்பிரான்சும் இருந்து வந்திருக்கிறது. அதுவும், தீவிரமாக மாறிவரும் உலக நிலைக்கொப்ப, தன்னையும் மாற்றிக்கொள்வதில் நல்லறிவைத் துணைக்கொண்டு, முயற்சியில் வெற்றியும் பெற்றுவருகிறது.

தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடுகளால் இங்கிலாந்தும், பிரான்சும் பெற்ற வளங்களைப்போல், கோவாவைத் தனது குடியேற்ற நாடாகக் கொண்டிருப்பதால், போர்ச்சுகல் என்றும் பெற்றது கிடையாது. இதற்கு போர்ச்சுகலின் பெருங்குணம் அல்ல காரணம். கோவாவின் இயற்கை அமைப்பு, போர்ச்சுகலின் சுரண்டல் வேட்டைக்கு ஏற்றதாக இல்லாததே அதற்குரிய காரணமாகும்.

உலகெங்கணும் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த பிரிட்டனும், பிரான்சும் நல்லறிவுடன் நடந்துகொண்டதை முன்மாதிரியாகக் கொண்டு, போர்ச்சுகலும், பொருளாதாரத்துறையில் தனக்குப் பெரும் பாரமாக இருந்துவரும் கோவாவை விட்டு இதற்குள்ளாக வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் போர்ச்சுகலோ, அதை விடுத்து பிடிவாதம் பேசுகிறது; அதிகார வெறி கொண்டு ஆர்ப்பாட்டம் செய்துவருகிறது. துப்பாக்கி பலத்தில் உறுதியான நம்பிக்கை வைத்துள்ள ஆதிபத்திய வெறியர்கள்போலவே, கோவாவை விடுவிக்கும் பணியில் ஈடுபடும் தொண்டர்களைத் தாக்குவதில் போர்ச்சுகல் அரசாங்கமும் ஈடுபட்டிருக்கிறது. இதில் ஆச்சரியமும் இல்லை; நாம் அதிர்ச்சியடைவதற்கான புதுமையும் இல்லை.

போர்ச்சுகல் அரசாங்கமாவது, சட்டத்தை மீறி கோவா எல்லைக்குள் நுழையும் இந்தியக் குடிமக்களைத் தாக்குகிறது—தரையில் சாய்ந்தவர் மீது கோரத் தாண்டவம் புரிகிறது ஆனால், நமது அகிம்சா மூர்த்திகளான பண்டிதர் கூட்டுத் தோழர்களின் ஆட்சியோ, வேடிக்கை பார்க்கும் அப்பாவிகளைக்கூடச் சுட்டு வீழ்த்திக் கொக்கரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது.

கல்லக்குடி — தூத்துக்குடி துப்பாக்கிப்பிரயோகம் இதற்கு அத்தாட்சி!

போர்ச்சுகலாவது, தனது எல்லை எனக் கூறிக்கொள்ளும் கோவாவில் காலெடுத்து வைக்கும் இந்தியக் குடிமக்களின் உயிரைக் குடிப்பதில் ஆர்வம் காட்டுகிறது. ஆனால் நமது காங்கிரஸ் அரசாங்கமோ, தனது குடிமக்களின் குருதியை குடிப்பதிலேயே ஆர்வம் காட்டுகிறது!

இப்படி நாம் ஒப்புவமை காட்டுவதினாலேயே, போர்ச்சுகலின் அக்கிரம அடக்குமுறையை நாம் ஆதரிப்பதாக ஆகிவிடாது. துப்பாக்கி தன்னிடம் இருக்கிறது என்ற காரணத்திற்காகவும், அதைப் பயன்படுத்தும் அதிகாரம் தன்னிடம் தஞ்சம் புகுந்திருக்கிறது என்ற காரணத்திற்காகவும், அந்த வாய்ப்பையும் வசதியையும் சாதாரண குடிமக்களை ஒடுக்குவதில், எந்த ஒரு அரசாங்கம் பயன்படுத்த முன் வந்தபோதிலும் அது கூடாது—கண்டிக்கத்தக்கது என்பதே நமது கோட்பாடு.

மனம் திறந்து ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதின் மூலமாகவே, கோவா இணைப்புப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பது இந்தியப் பேரரசின் உள்ளக் கிடக்கை எனப் பறை சாற்றப்பட்டு வருகிறது. இவ்வுள்ளக் கிடக்கையை, வாய்ப்பிருந்தாலும் இல்லாமற்போனாலும், பன்னிப் பன்னிப் பேசி வருகிறார், போகிற இடம் எங்கணும் இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவகர்!

இதற்கு ஒப்ப, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எவரும், கோவா விடுதலை கிளர்ச்சியில் பங்கு கொள்ளக் கூடாது எனக் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியினருக்கு கட்டளையும் இட்டிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவரின் கட்டளைப்படி, இப்பிரச்சினையை நோக்குவோமானால், கோவாவை விடுவிக்க இதுவரை நடந்த கிளர்ச்சியில் காங்கிரஸ் கட்சியினர் எவரும் கலந்துகொள்ளவில்லை என்ற முடிவிற்கே ஒருவர் வரவேண்டியதாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் கலவாத மற்றவர்களே கிளர்ச்சியை நடத்தி வருகின்றனர்; பங்குகொண்டு தொல்லைகள் பல அனுபவித்து வருகின்றனர் என்பதும் விளக்கமாகிறது.

பரஸ்பரம் கலந்து பேசுவதின் மூலம் கோவா இணைப்பை வெற்றியாக முடிக்கலாம்—முடிக்க வேண்டும் என்ற இந்தியப் பேரரசின் கோட்பாட்டை, நெறிதவறுமல் நிறைவேற்றுவதில் இந்தியப் பிரதமருக்கு உண்மையான கவலையும் கருத்தும் இருக்குமானால், அவர் என்ன செய்திருக்கவேண்டும்? கோவாவிற்குள் நுழைய முயற்சிக்கும் இந்தியக் குடிமக்களை, இந்திய எல்லைக்குள்ளாகவே தடுத்து நிறுத்தி இருக்கவேண்டியதுதான் நேர்மையாகும்—பிரதமரின்நீங்காக் கடமையாகும் என்றே எவரும் கூறுவர்.

கோவா நுழைய விரும்பிய இந்தியக் குடிமக்களை, இந்தியப் பேரரசு, ஏற்கனவே இந்திய எல்லையிலேயே தடுத்து நிறுத்தியும் இருக்கிறது. ஆனால் இன்றோ, நிலைமை தலைகீழாக மாறிவிட்டிருக்கிறது! அதாவது கோவாவிற்குள் நுழைய விரும்பும் குடிமக்களை, தாராளமாகச் செல்ல இந்தியப் பேரரசு வகை செய்துவிட்டிருக்கிறது!

இது பிரதமரின் 'பஞ்ச சீல மாதிரி'யாக இருந்தாலும் இருக்கக்கூடும்!

இந்தியப் பேரரசின் இப்போக்கு முரண்பாடு உடையதாக இருக்கிறதே என்ற காரணத்தாலோ என்னவோ, சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்னையில் கூடி, கோவா இணைப்பைத் துரிதப்படுத்த முயன்றிருக்கிறார்கள்.

கோவா இணைப்பை, இந்தியப் பேரரசும், காங்கிரஸ் கட்சியும்தான் வரவேற்கிறது; மற்ற கட்சியினரும் பெரும்பான்மையான மக்களும் வரவேற்கவில்லை என்ற ரீதியில், போர்ச்சுகல் அரசாங்கம், இதுவரையில் பிதற்றிக்கொள்வதற்கு இடமிருந்திருக்கிறது. அந்தக் குறைபாடு சென்னையில் கூடிய பல கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களின் முயற்சியால் கூடுமானவரை களையப் பட்டுவிட்டது.

சென்னையில் கூடிய மக்கள் சபை உறுப்பினர் கூட்ட முடிவு கோவா இணைப்பு குறித்து இந்தியப் பேரரசுடன் தன்னிச்சையாகக் கலந்து பேச போர்ச்சுகல் அரசாங்கத்தைத் தூண்டுமா என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. இருந்தாலும், போர்ச்சுகலுக்கு இதுவரை ஏற்பட்டிராத ஒரு புதிய அச்சத்தை கண்டிப்பாக உண்டாக்கியே தீரும் என்பதில் ஐயமில்லை. அது வகையில் சென்னை மக்கள் சபை உறுப்பினர் முயற்சி வெற்றிபெற்றிருக்கிறது என்று தான் கூறவேண்டும். கிடைத்துள்ள வெற்றி சிறிதானாலும், அதைப் பெறுவதற்காகப் பல கட்சியையும் சேர்ந்துள்ள சில மக்கள் சபை உறுப்பினர்களை சென்னையில் ஒன்று கூட்டுவதற்கு வழிவகை செய்தது பாராட்டுதற்குரியதாகும்.

போர்ச்சுகீசிய அரசாங்கம் வெளியேறுவதிலும், கோவா விடுபடுவதிலும் தங்களுக்கு மட்டுமேதான் அக்கரை என, இனி, காங்கிரஸ் கட்சியால் பீத்திக்கொள்ள முடியாது. அப்படிப் பீத்திக் கொள்வதற்குத் துளியும் இடமில்லாமல் செய்துவிட்டப் பெருமையும், சென்னை மக்கள் சபை உறுப்பினர் கூட்டத்தையே சார்ந்ததாகும். கோவா இணைப்பு பற்றிய ஜம்பப் பேச்சுப் பேச, தங்கள் செயல் மூலம், காங்கிரஸ் கட்சிக்கு இடம் கொடுக்காமல் செய்துவிட்ட மக்கள் சபை உறுப்பினர்களை, உண்மை தெரிந்த எவரும் பாராட்டவே செய்வர்.

'கோயில்கள் வியாபாரச் சந்தையாகிவிட்டன!'

'இந்து மதத்தில் ஏழ்மைக்கு மருந்தில்லை!'

கூறுவது நாமல்ல—குன்றக்குடி அடிகளார்!

இந்து மதத்திற்கு புது ரத்தம் புகுத்த வேண்டுமாம்

புதுக்கோட்டை ஜூன் 30—

"தமிழ் நாட்டில் விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும் குறைவில்லை; சடங்கிற்கும், சம்பிரதாயங்களுக்கும் பஞ்சமில்லை; ஆனால், அங்கு உளம் தோய்ந்த பக்தியைத்தான் காண முடியவில்லை."

'சட்டத்தைக் கொண்டோ, விழாக்களைக்கொண்டோ மக்களுக்கு பக்தியிருக்கிறது எனக் கூற முடியாது;

"கோவில்களும் காலப் போக்கில் வியாபாரச் சந்தையாகிப் போய்விட்டது;

"இதயத்தைக் கடை வீதியில் விட்டுவிட்டு கோவிலில் எத்தனைதான் அபிஷேக ஆராதனை செய்தால்தான் என்ன? அதனால் பலனே இல்லை;

"மனிதன் இவைகளை எல்லாம் செய்வதைவிட உளம் தோய்ந்த பிரார்த்தனை செய்வதுதான் மேலானதாகும்.

"இந்து மதத்தின் சார்பில் திக்கற்றவர்கள் இல்லம், பள்ளிக்கூடங்கள் முதலியன உண்டா? இந்து மதத்தில் ஏழ்மைக்கு, பசிக்கு மருந்தில்லை; மதத்திற்காக மக்கள் இல்லை; மக்களுக்காகத்தான் மதம் இருக்கிறது; எனவே, நமது மதத்திற்கு புது இரத்தம் ஊட்டப்பட வேண்டும்; கோவிலுக்கும் குடிசைக்கும் இடையில் உள்ள தூரம் குறைக்கப்பட வேண்டும்; இதனை இந்துமதம் சாதிக்காவிட்டால் நாளடைவில் நமது மதம் ஏட்டோடு நின்று விடும்,"

என்று, குன்றக்குடி அடிகளார் நச்சாந்துப் பட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர்காங்கிரஸ் பிளவுகள்!

ஒட்டுப்போட செயலாளர் முயற்சி

மைசூர் மாநில காங்கிரஸ் கட்சியில் நிலவும் பிளவுகளைச் சமன் செய்ய தன்னாலான முயற்சிகள் அத்தனையையும் செய்யத் தாம் தயாராக இருப்பதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவன் நாயர் குறிப்பிட்டிருக்கிறார்.

"பிளவுபட்டிருக்கும் எல்லா காங்கிரசாரும் ஒற்றுமையுடன், கட்சி நலனுக்கும், நாட்டு நலனுக்குமான வகையில் உழைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது; எனவே, அவர்கள் எல்லாம் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு வேலை செய்வார்கள் என்று நம்புகிறேன்; நான் பெங்களூரிலிருந்து புறப்படுமுன், பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன்," என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

சொன்னால் போதாது; செயல் வேண்டும்!

துர்க்காபாய் சொல்கிறார்

இந்தூர், ஜூலை 4—

"இந்த நாட்டுத் தலைவர்களின் பேச்சுக்களே இப்பொழுதுள்ள ஒரு பெரும் பிரச்சினையாகிவிட்டது; பேச்சுக்களினால் மட்டும் எந்தப் பயனும் விளைந்துவிட மாட்டாது; அத்துடன் நல்ல முயற்சியும், செயலும் இருந்தால் இந்த நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையே போக்கிவிடலாம்"

என்று திருமதி துர்க்காபாய் தேஷ்முக், கூட்டமொன்றில் பேச்சையில் குறிப்பிட்டிருக்கிறார்.

20 ஆண்டுகளில்

மேலும் பத்து இரும்புத் தொழிற்சாலைகளாம்!

"இன்னும் இருபதாண்டு காலத்தில், இந்தியாவில் 10 இடங்களுக்கும் அதிகமான இடங்களில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் நிறுவப்பட முடியும்,"

என்று, இரும்பு உருக்கு உற்பத்தி இலாகா செயலாளர் எஸ். பூதலிங்கம் குறிப்பிட்டிருக்கிறார்.

அணுகுண்டின் விளைவுகள்

பிரெஞ்சு விஞ்ஞானி கருத்து

"அணுகுண்டு வெடிக்கும்போது ஏற்படும் சக்தி வாய்ந்த தூசிப் படலம் சூரிய மறைவுகளின் ஒளியை நீண்ட காலத்திற்குக் குறைத்துவிட முடியும்,"

என்று, பிரெஞ்சு பருவநிலை ஆராய்ச்சி 'டைரக்டர்' ரோலியா என்பவர் கருத்தறிவித்திருக்கிறார்.

இந்தி நுழைத்தல் தீவிரமாகிறது

மத்திய சர்க்கார் ஊழியர்கள் 1965-க்குள் கற்கவேண்டுமாம்

புதுடில்லி, ஜூலை 4—
மத்திய அரசாங்க அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்தி போதிப்பதற்கென கல்வி, உள்நாட்டிலாகாக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக்கொண்ட சிறிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நான்காம் பிரிவு உத்தியோகம் பார்ப்பவர்களைத்தவிரவும், 1965-க்குள், வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுபவர்களைத் தவிரவும், இதர எல்லா ஊழியர்கள் பற்றி கணக்கெடுத்து, அவர்களை நான்கு பிரிவுகளாக்கி இந்தி போதிக்கப்படுமாம்.

முதல் பிரிவில், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருப்பர்.

இரண்டாம் பிரிவில் இந்தியோடு நெருங்கிய தொடர்பு கொண்ட உருது, பஞ்சாபி, சிந்தி, காஷ்மீரி போன்ற மொழி பேசுவோர் இருப்பர்.

மராத்தி, குஜராத்தி, வங்காளி, ஒரியா, அசாமி மொழி பேசுவோர் மூன்றாம் பிரிவில் இருப்பர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி பேசுவோர் நான்காம் பிரிவில் இருப்பர்.

கடைசி மூன்று பிரிவினரும் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத இதரர்கள்; அவர்களுக்கு இந்தி மொழியில் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிகிறது

இரண்டாம் பிரிவினர் ஆறுமாத காலத்திலும், மூன்றாம் பிரிவினர் ஒரு ஆண்டிலும், நான்காம் பிரிவினர் பதினெட்டு மாத காலத்திலும் இந்தி கற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இவர்களுக்கு இந்தி போதிக்க வகுப்புகள் துவங்கப்படும் என்றும் கூறப்படுகிறது எப்படியும் இந்திய சர்க்கார் அலுவலகத்தில் உள்ளவர்கள் 1965-க்குள் இந்தி கற்றுக்கொண்டாக வேண்டுமாம்

இந்த ஏற்பாடுகளுக்கான யோசனைகளை மத்திய சர்க்கார் உள்நாட்டிலாகா மந்திரி பண்டித பந்த் தருவாராம். அவர் முன்னிலையிலேயே இதற்கான குழு அமைக்கப்பட்டதாம்.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை

இனிஜனவரியில்நடைபெறும்

மைசூர் சர்க்கார் அறிவிப்பு

பெங்களூர், ஜூன் 3—
1956-ம் ஆண்டிற்கான சர்க்கார் நடத்தும் எஸ். எஸ். எல். சி பரீட்சை, ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி ஜனவரித் திங்களில் நடைபெறும் என்றும், இனி பள்ளி ஆண்டு, ஜனவரியிலிருந்தே துவங்கும் என்றும், மைசூர் மாநில கல்வி இலாகா தலைமை அதிகாரியான என். எஸ். இரண்யா என்பவர் அறிவித்திருக்கிறார்.

ஆந்திராவில் சுண்ணாம்புக் கல் கண்டுபிடிப்பு

சிமெண்ட் உற்பத்திக்கு உதவும்

ஆந்திர மாநிலத்தில் கிருஷ்ணா மாவட்டத்தில், ஜக்கய்ய பேட்டைக்கு அருகாமையில் சுமார் 2,690 லட்சம் டன் சுண்ணாம்புக் கல் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய சுண்ணாம்புக் கல்லை ஆராய்ந்து பார்த்ததில் இது போர்ட்லண்ட் சிமெண்ட் உற்பத்திக்கு ஏற்றதெனத் தெரிய வருகிறது இப்படிவங்களில் சுத்தமான சுண்ணாம்புக் கல்லும், சுத்தமாக இல்லாத சுண்ணாம்புக் கல்லும் காணப்படுகின்றன.

பர்மா-ரஷ்யா வர்த்தக ஒப்பந்தம்

ரங்கூன், ஜூலை 1—
பர்மா–ரஷ்யா ஆகிய நாடுகள், தங்களுக்கிடையே உள்ள வர்த்தகத்தை வளர்க்கவும், வர்த்தகத் தொடர்புகளை உறுதி செய்து கொள்ளவுமாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன.

இதன்படி ரஷ்யா ஒன்றரை அல்லது இரண்டு லட்சம் டன் பர்மா அரிசி வாங்கிக்கொண்டு சோவியத் சாதனங்கள் இயந்திரங்கள் மற்றும் இதர பொருள்கள் பர்மாவுக்குத் தரும் என்றும் தெரியவருகிறது.

குழாய்க் கிணறுகள்

சில விபரங்கள்

வேண்டியபோது தேவையான இடங்களில் இயற்கை நீர்வளத்தைப் பயன்படுத்த விஞ்ஞானமும், பொது அறிவும் துணை செய்துவிட்டன. இன்று சென்னை மாநிலத்திலுள்ள பல கிராமங்களில், உலோகத் துண்டுகள், தாரையைக் குடைந்து, நீர்த் தேக்கங்களையும், நீரோடைகளையும் தேடிக் கண்டுபிடிக்கின்றன.

குழாய்க் கிணறு வெட்டுவதற்கு முக்கியமான கருவிகள் உலோகத் துண்டுகள், தரைக்கு அடியில் ஆழமான இடத்திலிருந்து தண்ணீரை மேலே கொண்டுவருபவை அவைகளே! நல்ல குழாய்க் கிணறு வெட்டியெடுப்பதற்கு பம்புகள், துளைக்கருவிகள், குழாய்கள் முதலியவை வேண்டும்.

கனம் மிகுந்த உலோகத் துண்டுகள் கற்பாறையையும், களிமண்ணையும்; கல்லாய் இறுகிய களிமண்ணையும் ஊடுருவிச் செல்கின்றன. துளைக்கவேண்டிய இடத்திற்கு ஏற்ற உலோகத் துண்டுகள் உபயோகிக்கப்படுகின்றன. மூன்று வாரம், நான்கு வாரம், ஐந்துவாரம் வரை இவ்வேலை நடந்து கொண்டே இருக்கிறது. பயிற்சி பெற்ற எஞ்சினீயர்கள் மண்ணைப் பரிசோதனை செய்து, அதற்கேற்ற உலோகத் துண்டுகளை உபயோகப்படுத்துகிறார்கள். தரைக்கு அடியில் தண்ணீர் கிடைக்கும் இடம் வரை பூமியைத் துளைத்த பின் குழாயை செலுத்தி விடுகிறார்கள் அந்தக் குழாய்க் கிணற்று நீர், வரண்ட நிலத்தை வளம் பொருந்தியதாக்குகிறது.

'குழாய்க் கிணறு வெட்டவேண்டும்' என்று விரும்பும் விவசாயிகள் சென்னை அரசாங்கத்தின் 'டிரில் அண்டு பம்பு' இலாகாவுக்கு எழுதவேண்டும். அந்த இலாகா தேவையான கருவிகளைக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறது பயிற்சி பெற்றவர்கள், வேலையை மேற்பார்க்க அனுப்பப்படுவார்கள் இந்த இலாகா தென்னாற்காட்டில் 100 குழாய்க் கிணறுகள் வெட்டியிருக்கிறது.

நில வரி வருமானம்

கிராம பஞ்சாயத்துகளுக்கு பங்கு தர ஆந்திர சர்க்கார் யோசனை

கர்னூல், ஜூலை 1—
ஆந்திர சர்க்கார், மாநிலத்தில் வசூலிக்கப்படும் நிலவருமான வரியில் ஒரு பகுதியை, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கித் தருவது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுபற்றி முடிவு சீக்கிரமே மேற்கொள்ளப்படும் என்று, ஆந்திர ஸ்தல நிர்வாக இலாகா மந்திரியான டாக்டர் ஏ. பி. நகேஸ்வர ராவ் குறிப்பிட்டிருக்கிறார்.

சிம்லாவில் மாநில தல நிர்வாக இலாகா மந்திரிகள் மாநாடு நடைபெற்றபோது, பம்பாய் சர்க்கார் தங்களுக்குக் கிடைக்கும் நிலவருமானத்தில், 30 சதவிகிதத்தை கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கித் தருவதாக, எடுத்துக் கூறப்பட்டதாம்.

புதுவைக்குக் கப்பல்கள்

அமைச்சரிடம் கோரிக்கை!

சென்னை துறைமுகத்திற்குச் சரக்குகள் ஏற்றிச் செலும் கப்பல்களுள் சிலவற்றை புதுச்சேரி துறைமுகத்திற்கு மாற்ற வேண்டுமென்று புதுச்சேரி நகரசபையினர், மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு அளித்த வரவேற்பு ஒன்றின்போது கோரிக்கை தெரிவித்துக்கொண்டனராம்.

புதுவையில் வாணிபம் செழித்தோங்கியிருந்ததற்குக் காரணம், இதுவரையில் அங்கு இறக்குமதி வரியினின்றும் விலக்குச் செய்யப்பட்டதே என்றும், அதிகாரம் மாற்றப்பட்ட பின்னரோ, புதுவையின் வணிக முக்கியத்துவம் குறைந்துவிடுமென்றும், இதனால் ஆயிரக்கணக்கான சிறு வணிகர்கள் தொழிலற்றுப் போய்விட நேரிடும் என்று அஞ்சப்படுவதாகவும் அக்கோரிக்கையில் கூறப்பட்டிருந்தது.

“இவ்வாறு செய்வதின் மூலம், சென்னை துறைமுகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இடநெருக்கடியைக் குறைக்கவும், புதுவையில் ஏற்பட்டுள்ள 'புது நிலைமை'யால் வேலையற்றுப்போகக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலை வசதி கிடைக்கவும் வழி வகைகள் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுவை தனித்தியங்க வேண்டுமாம்

புதுச்சேரி, ஜூலை 1—
இந்திய அரசியல் அமைப்பில் புதுச்சேரி, தனி இயல்புடன் விளங்க வேண்டுமென்பதே இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரின் பேரவா என்றும், எனவே, புதுச்சேரியின் 'தனித்தியங்கும் தன்மை' எவ்வகையிலும் குலைக்கப்பட மாட்டாது என்றும் இந்திய சர்க்கார் தொழில் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறியிருக்கிறார்.

புதுச்சேரியின் வாணிபத்தை வளம் பெறச் செய்வதில் தமக்கு மிகுந்த அக்கரை உண்டென்றும், கடற் பாலத்தைப் பழுது பார்ப்பது, துறைமுக வசதிகளைச் சீர்திருத்தம் செய்வது ஆகியவை பற்றி நகரசபை தெரிவித்த யோசனைகள் குறித்துத் தம்மாலானதைச் செய்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இங்குள்ள பஞ்சாலைகளையும் அவர் சுற்றிப் பார்த்து ஏற்றுமதி மார்க்கெட்டுகளை இழந்ததால் தற்போது அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் அதிகாரிகளுடன் விவாதித்தாராம்.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், வரப்போகும் தேர்தலில் காங்கிரசுக்கே மக்கள் வாக்களிப்பார்கள் என்று தாம் 'திடமாக' நம்புவதாகவும் கூறியிருக்கிறார்!

'தேவதாசி' முறை

கர்நாடக மாவட்டங்களில் நீடிக்கிறதாம்

புதுடில்லி, ஜூலை 2—
பம்பாய் மாநிலத்தில் உள்ள கர்நாடக மாவட்டங்கள் நான்கில், கோவில்களுக்கென 'அர்ப்பணம்' செய்யப்பட்ட 'தேவ தாசி'களை மீண்டும் திரும்பப் பெற, பின் தள்ளப்பட்ட வகுப்பு மக்கள் குழுவின் திட்டங்களின்படி, முயற்சிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்த தேவதாசிகளில் பெரும்பாலோர், மிகச் சிறு வயதிலேயே, கோவில்களுக்கு 'விற்கப்பட்ட'வர்கள் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

தேவதாசி முறை பற்றி ஆராய்ந்து தகவல் தருமாறு, அந்தக் குழு, உள்ளூர் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறதாம்.

கழகச் செய்திகள்

ஆமதாபாத்—நரோடா தி. மு. கழகம்

26—6—55 மாலை 5 மணிக்கு தோழர் சு பாபு தலைமையில் நடைபெற்ற ஆமதாபாத் (நரோடா) 3-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர்கள் நா. முனுசாமி, இரா. நடராசன், கே. ஜி. சேகர், ஆர். டி. அசலம், இரா. வைத்திலிங்கம் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றியும், கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆமதாபாத் — ஜமால்பூர் தி. மு. கழகம்

26—6—55 மாலை 4 மணிக்கு, ஆட்டாவாலாசால் தோழர் ப. பாண்டியன் இல்லத்தில், தோழர் ந. சரவணன் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர், தோழர் இ. நெடுமாறனை கழக உறுப்பினர் பதவியினின்றும் விலக்கியும், அண்ணா அவர்களுக்கு நன்றியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுதலும் தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்துக் கிருட்டிணாபுரம் மறுமலர்ச்சி மன்றம்

30—6—55 இரவு 8 மணியளவில், தோழர் ப. புகழேந்தி தலைமையில், நடைபெற்ற மேற்படி மன்றப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சொற்பயிற்சிக் கூட்டம் நடத்துவதென்றும், முத்துக் கிருட்டிணாபுரம் மின் விளக்குக் கம்பங்கள் இரண்டில் மின்விளக்கேற்ற நகராண்மைக் கழகத்தை வேண்டியும், தி. மு க. வின் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும் அண்ணா அவர்கள் ஆற்றிய பெரும் பணிக்குப் பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாற்காலிகள், பெஞ்சுகள் ஜப்தி

தமாஷா வரி செலுத்தாததின் விளைவு!

குழித்துறை, ஜூலை 3—
தமாஷா வரி இனத்தில் நகரசபையினருக்குச் செலுத்த வேண்டிய தொகையை உரிய காலத்தில் கொடுக்காத காரணத்தையொட்டி, குழித்துறையிலுள்ள ஸ்ரீ குமார் தியேட்டர் ஜப்தி செய்யப்பட்டு, தியேட்டரிலுள்ள பெஞ்சு, நாற்காலி போன்ற பொருட்கள் அனைத்தும் தியேட்டரினின்றும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி தியேட்டர் உரிமையாளர், நகரசபைக்கு தமாஷா வரி இனத்தில் ரூ. 600-க்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருந்ததாகவும், நகரசபைக் கமிஷனர், இதுகுறித்து விடுத்த அறிவிப்புகள் எதற்கும் அந்தத் தியேட்டர் உரிமையாளர் சரியான பதில் தரவில்லை என்றும், இதனால்தான் நகரசபையினர் இத்தகைய தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள நேரிட்டது என்றும் கூறப்படுகிறது.

நகரசபைக் கமிஷனர் சங்கர நாராயண அய்யர், மேற்படி தியேட்டரை ஜப்தி செய்தது மட்டுமல்லாமல், சட்டத்தை மீறி முதல் ஆட்டம் நடத்தப்பட்டதால், இரண்டாவது ஆட்டம் நடைபெறவொட்டாமல் தடுத்து நிறுத்தினார் என்றும், அதன் பின்னரே நாற்காலி, பெஞ்சு ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது.

திருமணங்கள்

26—6—55 காலை 9 மணிக்கு, மாயூரம் வட்டம் நல்லாடையில் தோழர் ப. முனுசாமி—தோழியர் நவனீதம் திருமணம் தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டியும், திருத்திய திருமணத்தின் அவசியம் குறித்தும் தோழர்கள் செ. ஜம்பு, கே. எஸ். சௌந்தரராசன், என். பிட்டப்பா, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

அன்று காலை 11-30க்கு நாசிங்கநத்தத்தில், தோழர் மாசிலாமணி—தோழியர் சகுந்தலா திருமணம், தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றது.

திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு தனித் தனியே ரூ. 1, ரூ. 1 தரப்பட்டது.

• • •

29—6—55 காலை 8½ மணியளவில், இராசிபுரம், புதுப்பாளையம் மணமகன் இல்லத்தில், தோழர் சின்னு (பழனிமுத்து)—தோழியர் வள்ளியம்மாள் திருமணம் தோழர் மைக்கேல் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் கே. வி. கே. இராமசாமி, ந. சாந்தன், கே. காச்சிமுத்து, கிருட்டிணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

• • •

26—6—55 அன்று கல்லூரணி தோழர் இராசதுரை—அத்திக்குடி தோழியர் தமயந்தி திருமணம் திருப்பரங்குன்றத்தில்; திரு. ப. ரா. முத்துச்சாமி தலைமையில் நடைபெற்றது. திரு. ச. வி. நாதன், அத்திக்குடி பாத்திமா கல்லூரித் தலைவியர் திருமதி சகுந்தலா, மற்றும் பலரும் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். பல தலைவர்களிடமிருந்து வாழ்த்துச்செய்திகள் வந்தன. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

• • •

இராசபாளையம் தோழர் கனேசனுக்கும்—தோழியர் பாக்கியவதி அம்மையாருக்கும்நடைபெற்ற திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

• • •

30—6—55-ல், வீரக்கவுண்டனூர் தோழர் இராமு—தோழியர் பொன்னம்மாள் திருமணம் திரு. தி. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். பி. சுப்ரமணியம் எம்.எல்.ஏ, மாணிக்கம், கா. வீரன், கூ. அண்ணாமலை, பூ. பச்சமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

• • •

30—6—55ல், வீரக்கவுண்டனூர் தோழர் சின்னு—தோழியர் திருவாய் அம்மாள் திருமணம், தோழர் எம். பி. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 0-8-0 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

நன்கொடை அளிக்கப்பட்ட தொகைகளை வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

ஆம்பூரில் அம்பேத்கார் விழா

26—6—55 மாலை 4 மணிக்கு மாங்குப்பத்திலிருந்து, டாக்டர் அம்பேத்கார் உருவப்படத்துடன் ஊர்வலம் நடைபெற்ற பின்னர் முகமதலி மைதானத்தில் திரு. கே. எம். சாமி தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சி. எம். ஆறுமுகம், ஜே. சி. ஆதிமூலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

1954—55-ல், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட உணவு, பானங்கள், புகையிலை ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ. 19.86 கோடி.

டி. டி. கே. கூறும் நொண்டி சமாதானம்

'தென்னாட்டில் நிலக்கரியும் முதலாளிகளும் இல்லை!'

அவைகளே தொழிற்சாலை துவங்க தடைகளாம்!

திட்டங்கள் குறித்து தென்னாடு — வடநாடு என்று பிரித்துப் பேசக்கூடாதாம்!

காங்கிரஸ் தீர்மானத்தின்மீது பேச்சு

" இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாடு அலட்சியப்படுத்தப்படுவதாக பொதுவான ஒரு கருத்து இங்கு நிலவுகிறது; இது ஒரு தவறான கருத்தாகும்;

" தென்னாட்டில் பெரும் தொழிற்சாலைகள் இல்லை என்றால் அதற்கான காரணங்களை நாம் கண்டறியவேண்டும்;

' இங்கு நிலக்கரி கிடைக்கவில்லை; நெடுந்தொலைவிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவந்து தொழில் துவக்குவது சிக்கனமாக இருக்க முடியாது; இது முதல் காரணம்.

" இரண்டாவது காரணம், இங்கு பெரும் முதலாளிகள் இருக்கவில்லை; நிலமும், செல்வமும் உடைய பணக்காரர்கள் இங்கிருக்கலாம்; ஆனால், பெரும் தொழிற்சாலைகள் துவங்குவதற்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டக் கூடியவர்கள் அதிகம் இங்கில்லை, "

—என்று, மத்திய அரசாங்க தொழில் வர்த்தக இலாக்கா மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தென்காசியில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் செயற்குழுவின் ஐந்தாண்டுத் திட்ட தீர்மானம் குறித்து விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார் :—

" நான் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக்கு அதிகமான முக்கியத்துவம் தருகிறேன்; காரணம், அதனால் ஏராளமான தொழில் வசதிகள் ஏற்பட முடியும் என்பதினால் மட்டும் அல்ல—மின்சார அபிவிருத்திக்கு, அதன் உபயோகம் அதிகமிருக்கும் என்பதினாலும்தான்;

" மின்சாரம், சாதாரண சிறிய கிராமத் தொழில் அபிவிருத்திக்கும் கூட அத்தியாவசியமாகத் தேவையாகும்.

" ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பலர் பலவிதமாகக் கூறலாம்; ஆனால், அதன் லட்சியத்தை எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது;

" இரண்டாம் திட்டம் ஒரு கூட்டு முயற்சியாகும்; அதனை நாட்டின் ஒரு பகுதியில் என்ன செய்யப்பட்டது—மற்றப் பகுதியில் என்ன செய்யப்படவில்லை என்று நிர்ணயிக்க முற்படக் கூடாது;

" ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றி தென்னாடு—வடநாடு என்று எண்ணுவது கூடாது; நாடு முழுவதுக்குமானதொரு திட்டம் அது; தென்னாட்டிற்கும் அதற்குரிய தொழில் திட்டங்கள் கிடைக்கும்!

" தென்னாட்டு மக்கள் தங்களிடம் நம்பிக்கை வைத்து இந்த வேறுபாடுகளை விட்டொழிக்க வேண்டும்."

வீட்டு வசதி

இந்தியா முழுதும் 'சர்வே'

கிராமப் பகுதிகளிலும், நகரங்களிலும் வீட்டு வசதி நிலைமை பற்றி இந்தியா முழுவதிலும் சீக்கிரமே 'சர்வே' நடத்தப்படுமென்றும், புள்ளி விபரங்கள் சேகரிப்பதற்கென ஒரு தனி ஏற்பாடு செய்யுமாறு மாநில சர்க்கார்கள் கேட்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

ஒரு முனையில் விற்பனைவரி

சர்க்கார் பரீட்சிக்கும்?

காப்பிக்கொட்டை, நூல் போன்ற சில பொருள்களுக்கு 'பரீட்சார்த்த'மாக ஒரு முனையில் விற்பனை வரி விதிப்பது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாக முதன் மந்திரி காமராசர், தென்காசியில் அறிவித்திருக்கிறார்.

பாக்-ஆப்கன் தகராறு

தகுந்த நடவடிக்கை எடுக்க பாக். சர்க்கார் முடிவு?

கராச்சி, ஜூலை 24—

காபூலில் பாகிஸ்தான் கொடியை அவமதித்ததற்காக, ஆப்கனிஸ்தான் மன்னிப்புக் கோரியும் இதர பரிகாரங்களும் செய்யத் தவறினால் 'தகுந்த நடவடிக்கை' எடுக்க பாகிஸ்தான் சர்க்கார் இறுதித் திட்டங்கள் வகுத்துள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறதாம்.

அரசியல் தூதுவர் உறவுகளைத் துண்டித்துக் கொள்வதும் இத்திட்டங்களில் ஒன்று என்று தெரிய வருகிறது

பாகிஸ்தானிடம் பகைமை கொள்வது முட்டாள்தனமானது என்பதை உணர ஆப்கனிஸ்தானுக்கு காலம் தருவதாக பாக் சர்க்கார் தீர்மானித்திருப்பதாக வெளிகாட்டிலாகா அதிகாரி கூறியிருக்கிறாராம்.

" சவூதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் முயன்றும் முடியாமற் போய்விட்ட சமரச ஏற்பாடுகளை இனி துருக்கி, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளின் செல்வாக்கின் மூலம் மேற்கொள்ளப்படுவது சாத்தியமானதல்ல" என்றும் பாகிஸ்தான் அதிகாரி தெரிவித்திருக்கிறாராம்.

பஞ்சாப் சர்க்காரின் வரட்டுப் பிடிவாதம்!

அகாலி தளத்தினர் கிளர்ச்சிக்கு 'பலாத்கார திருப்பம்' தருகிறது?

போலீசார்—கிளர்ச்சிக்காரர்கள் மோதுதல்!

அமிர்தசரஸ், ஜூலை 4—

அகாலி தளத்தவர் பஞ்சாப் மாநிலம் கோரி நடத்திவரும் கிளர்ச்சி, பஞ்சாப் சர்க்காரின் வரட்டு பிடிவாதத்தினால், இத்தனை நாட்களும் எவ்வித அசம்பாவிதமுமின்றி நடைபெற்று வந்தது. இப்போது, 'கைகலப்பு—கலகம்' என்ற நிலையில் உருப்பெறுவதாகக் கூறப்படுகிறது.

நேற்று பொற்கோவிலுக்கு தளம் ஆகியவற்றினை போலீசார் வெளியே போலீசாருக்கும்—அகாலிகளுக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பின் விளைவாக 6 அதிகாரிகள் உட்பட 25 பேர் படுகாயமுற்றனர் என்று தெரிகிறது

400-க்கும் அதிகமான அகாலி தளத்தவர், பொற்கோவிலுக்கு வெளியே கூடி, தங்கள் உரிமைக் குரலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மீறி குரல் எழுப்பி இருக்கின்றனர்.

கலைந்து செல்லுமாறு அவர்களுக்குக் கூறியது பலன் தராமல் போய்விடவே, போலீசார், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனராம்.

30 அகாலிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதன் விளைவாக, ஆத்திரமடைந்த அகாலிதளத்தவர், போலிசாருடன் நேரடி மோதுதலில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது

போலீசார் மீது கல்லெறிந்ததாகவும், சுற்றுப்புற வீடுகளிலிருந்து கைத் துப்பாக்கியால் சுட்டனர் என்றும் செய்திகள் கூறுகின்றன; ஆனாலும், அகாலி தளத்தவர் சுட்டதினால் எவருக்கும் காயமேற்படவில்லையாம்.

எதிர் நடவடிக்கையான போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

கைத் துப்பாக்கியால் சுட்ட அகாலிதளத்தைச்சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டாராம்

போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 அகாலிதளத்தவருக்குக் காயமேற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொற்கோயிலைச் சுற்றியும் போலீசார் காவல் புரிந்து வருவதுடன், சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழு, சிரோமணி அகாலி

சோதனையிட்டு 'பாரா' புரிந்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்களில் ஒரு உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர்—ஜெனரலும், 4 மாவட்ட போலீஸ் அதிகாரிகளும் இருக்கின்றனராம்.

நிலை இப்போது கட்டுக்கடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இரண்டாவது திட்ட கடன் வசூலாகி விட்டதாம்!

இரண்டாவது தேசீயத் திட்டக் கடன் தொகை ரூ 100 கோடியும் வசூலாகிவிட்டதாம்.

3½ சதவிகித வட்டியுள்ள இக் கடன் 1965-ல் திருப்பித்தரப்படுமாம்.

சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில், 1955 மார்ச் மாதம் வரை திருத்திப் பண்படுத்தப்பட்ட தரிசு நிலங்களின் மொத்த பரப்பளவு 4,48,852 ஏக்கரா.

அமெரிக்க சுதந்திர நாள்!

அமெரிக்காவின் 179-வது சுதந்திர நாள் விழா அமெரிக்கா முழுவதும் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

" சுதந்திரத்தின் பலனை மக்கள் பேணிப் பாதுகாப்பதற்காக, 1776-வருடத்தில் வெளியிடப்பட்ட அமெரிக்க சுதந்திரப் பிரகடனமாகிய வர்ஜீனியா உரிமைச் சாசனத்திலே உள்ள 'ஜீவாதாரத் தத்துவங்களை' நினைவில் கொள்வது அவசியமாகும்"

என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், தமது விழாச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

" இந்த நாளைக் கொண்டாடும் போது, ஒவ்வொரு அமெரிக்கரும், தங்கள் பரம்பரை தர்மத்தையும், மனித சுதந்திரத்தில் உள்ள பற்றுதலையும் புதுப்பித்துக் கொள்ளவேண்டும், "

என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சென்னையில் :

சென்னையிலுள்ள அமெரிக்கக் கான்சல்-ஜெனரலான ராட்சே, அமெரிக்கக் குடியரசில் 179-வது சுதந்திர விழாவான மேற்படி தினத்தன்று, சென்னையில் சிறப்பானதொரு வரவேற்பு உபசாரம் நடத்தியிருக்கிறார்.

இட்லி—சாம்பார்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துவ விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர். இப்பிணியாளர்களைக் குணப்படுத்துவதற்காக ஏராளமானப் பொருளை அரசாங்கம் செலவு செய்து வருகிறது."

" கூடுமானவரை விரைவில் பிணியாளர்களைக் குணமடையச் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன், முட்டை, பால், பழம், உயிர்சத்து மாத்திரை முதலியவைகள் வலுக்கட்டாயமாக பிணியாளர்களுக்குத் தரப்படுகிறது ஆனால், அவர்களால் விரும்பப்படாத இட்லி சாம்பாரை அவர்கள் மீது திணித்து, அவர்கள் உணவில் ஒரு பகுதியான சத்தான ரொட்டி வெண்ணெயை அறவே கொடுக்காது அரசாங்கம் இருந்துவிட்டது, அப்பிணியாளர்களின் உடல் நலத்தைப் பாதித்தே தீரும். இட்லி-சாம்பார்தான் தங்களுக்கு வேண்டும் என சில பிணியாளர்கள் கோரினால், அவ்வுணவினால் அப்பிணியாளர்களின் உடல் நலம் கெடாது என்பதில் அதிகாரிகளுக்கு நம்பிக்கை ஏற்படும் பட்சத்தில், அப்பிணியாளர் விருப்பத்தை அவர் நிறைவேற்ற முன்வரலாம்."

ரம்சான் மாதத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அசாரை விடுவிக்கும் முதல் முயற்சியாக என்னுடைய வழக்கு இருக்கிறது என நான் கருதுகிறேன்; என்னுடைய போராட்டம் புதுமைக்கும் — பழமைக்கும் நடைபெறும் ஒரு போராட்டமாகும்; அல்அசாரின் கண்ணியத்திற்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டும்."

என, அப்பேராசிரியர் விளக்கந் தந்துள்ளார்.

முன்னாள் மன்னர் பரூக் நிலங்கள்...

நிலமற்றோருக்கு தரப்பட்டது

எகிப்தின் முன்னாள் மன்னரான பரூக்கிற்கும், அவரது 'இராஜ குடும்பத்'தினருக்கும் சொந்தமாயிருந்த சுமார் 26,000 ஏகர் நிலத்தை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, பிரதமர் கர்னல் நாசர் பிரித்துத் தந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

'புரட்சித் தலைமையின் நிலச் சீர்திருத்தத் திட்டப்படி, இதுவரை பிரித்துத் தரப்பட்டிருக்கும் நிலத்தின் அளவு 1,25,000 ஏகராகும்.

சுமார் ஆயிரம் விவசாயிகளடங்கிய கூட்டமொன்றில் பேசுகையில், கர்னல் நாசர், 'ஒரு உறுதியான மக்களாட்சி நிறுவப்படும் வரை, எகிப்திய நாட்டின் வழிகாட்டும் பொறுப்பை புரட்சித் தலைமையே தொடர்ந்து மேற்கொள்ளும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"திடமான பார்லிமெண்டரி நிர்வாகம் இருந்தாலொழிய, எகிப்தில் ஜனநாயக ஆட்சி இருக்க முடியாது," என்றும் அவர் கூறினார்.

தி.மு.க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் மணப்பாறை வருகை

7—7—55 மாலை 6 மணிக்கு, மணப்பாறை, நேரு சதுக்கத்தில், தி. மா. மு. சழகச் சார்பில், தோழர் காசிநாதன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசுவர்.

சிதம்பரம் வட்ட தி.மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

"6—7—55 மாலை 4 மணிக்கு, சிதம்பரம் வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், சிதம்பரம், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். அது போது பல பொருள்கள் குறித்து ஆராயப்படும்.

" அவ்வயம், நமது வட்டம் கொடுக்க வேண்டிய மாநில மாநாட்டு பங்குத் தொகை ரூ. 300-ம் அவசியம் அன்றைய தினமே கொடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ள நாம், செயற் குழுவில் சிற்றூர் கிளைக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் ரூ. 12, உடன் கொண்டு வந்து சேர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சிதம்பரம் வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் பொன். சொக்கலிங்கம் அறிவிக்கிறார்.

சென்னை 5-வது வட்ட தி.மு.கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

7—7—55 மாலை 7 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழக இல்லில் நடைபெறும். அது போது, பொதுக்கூட்டம் பற்றி ஆலோசிக்கப்படும்.

பம்பாய் மாநில தி. மு. கழக பொதுக்குழு உறுப்பினர்கட்கு

10—7—55 காலை 9½ மணிக்கு, பம்பாய் மாநில தி. மு கழகப் பொதுக் குழுக் கூட்டம், பாண்டுப் கிருஷ்ணா தியேட்டரில் நடைபெறும். அதுபோது, பாண்டுப் கிளையின் சார்பில், பொதுச்செயலாளர் தியாகராசன் அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

6—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லில், தோழர் சேதுராசன் தலைமையில், 'வள்ளுவர் உள்ளம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

6—7—55 காலை 9 மணிக்கு, மதுரை, மணிநகரம், எண். 8, மெயின் ரோடு, மணமகன் இல்லத்தில், தோழர் தங்கமுத்து—தோழியர் சண்முகம் திருமணம், தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும்.

* * *

7—7—55 காலை 8½ மணிக்கு, கட்டிமேடில், எஸ். சுந்தரமூர்த்தி—தோழியர் ரெங்கநாயகி திருமணம், தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். எஸ். இளங்கோ, மு. அ. செங்குட்டுவன், பி. எஸ். ஏ. ரகீம் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.